## கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த விவசாய தொழில்நுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவகம் - 2012

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த விவசாய தொழில்நுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவகத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் நடைமுறையல்லாச் சொத்துக்களில் உள்ளடங்கியுள்ள கட்டிடக் கணக்கில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளபடி கட்டிடத்தினை மேம்படுத்துவதற்காக செலவிடப்பட்ட ரூபா 1,144,218 தொகை மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், நிறுவனத்திற்குச் சொந்தமான 3843 சதுர அடிகள் (ஏறத்தாழ) கொண்ட 04 கட்டிடங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியம இல. 01 (எஸ்எல்பீஎஸ்ஏஎஸ்) இன் 21 (உ) பிரிவின் பிரகாரம் பாதிடப்பட்ட தொகைகள் மற்றும் முரண்கள் தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மூலதன மானியங்களிலிருந்து மீளாய்வாண்டில் ரூபா 2,040,365 தொகைக்கும் முன்னைய ஆண்டுகளில் ரூபா 4,488,268 தொகைக்கும் நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய பெறுமானத் தேய்வுகள் நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 கணக்காய்விற்கான சான்றின்மை

நிறுவனம் நடாத்திச்செல்லப்பட்டு வருகின்ற ஏறத்தாழ 300 ஏக்கர் காணியின் சட்டரீதியான உரித்து கையேற்கப்பட்டமைக்கான எழுத்துமூலச் சான்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்கி ஒழுகாமை

பின்வரும் இணங்கி ஒழுகாமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் 394 | கொழும்பு பல்கலைக்கழக விவசாய தொழில்நுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவகத்தினால் 2011 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டு இரத்துச் செய்யப்பட்டிருந்த ரூபா 212,540 கூட்டுத்தொகையான காசோலைகளை வருமானத்திற்கு எடுப்பதற்கு 2013 ஒக்தோபர் 10 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 25 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | மூலதனச் சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காக அரசாங்கத்தினால் வழங்கப்பட்டிருந்த மானியங்களிலிருந்து ரூபா 20,335,420 திறைசேரியின் அங்கீகாரமின்றி நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிறுவக செயற்பாடுகளிலிருந்தான விளைவுகள் மீண்டெழும் செலவினத்திற்கான அரசாங்க மானியத்தைக் கணக்கிலெடுக்க முன்னர் ரூபா 5,726,107 பற்றாக்குறையொன்றானதுடன் அதனையொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 5,387,001 ஆக காணப்பட்டது. மீண்டெழும் செலவினத்திற்கான ரூபா 7,921,000

அரசாங்க மானியம் காரணமாக மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 2,194,893 மிகையாக மாற்றமடைந்திருந்ததுடன் முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்திற்கான ரூபா 7,216,606 அரசாங்க மானியம் காரணமாக அவ்வாண்டின் பற்றாக்குறை ரூபா 1,829,605 மிகையாக மாறியிருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதிவிளைவுகளில் ரூபா 365,288 சாதகமான நிலைக்கு அரசாங்க மானியம் ரூபா 704,394 ஆல் அதிகரித்திருந்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது நீண்டகாலமாக களஞ்சியத்தில் வைத்திருக்கப்பட்டிருந்த ரூபா 30,275 பெறுமதியான பொருட்கள் மற்றும் கிரயம் உறுதிப்படுத்தப்படாத சேதமடைந்த நிலையிலுள்ள பொருட்கள் காணப்பட்டதுடன் அவற்றை அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 2,922,753 கூட்டுமொத்தப் பெறுமதி கொண்ட நிறுவக ஆராய்ச்சிகளிற்காக கிடைத்திருந்த மானியங்கள் வேறு நடவடிக்கைகளிற்காக செலவிடப்பட்டிருந்த போதிலும், நிதியக் கணக்கின் மீதி மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் நிறுவக அபிவிருத்தி நிதியத்திற்கு மாற்றப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவக இயக்கச் செயற்பாடுகளிற்காக பயனுள்ள விதத்தில் பயன்படுத்திக் கொள்வதற்காகவும் வழிகாட்டுவதற்காகவும் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்காமையால் மீளாய்வாண்டில் அரசாங்க மூலதன மானியங்களாக நிறுவகத்திற்குக் கிடைத்திருந்த நிதிகள் விளைவற்றுக் காணப்பட்டன.

### 4.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

2012 ஆம் ஆண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படாதிருந்ததுடன் இதன் காரணமாக 2012 ஆம் ஆண்டில் அடைந்துகொள்வதற்கு /நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் மற்றும் இலக்குகளையும் அவற்றின் நிதிசார் மற்றும் பௌதீக செயன்முன்னேற்றத்தினையும் கணக்காய்வில் பரிசோதிக்க முடியவில்லை.

**4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டில் அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டிற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் உள்ளடக்கப்பட்ட பாதீட்டினை பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பித்து அங்கீகரிக்கப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பித்திருக்கவில்லை.

**4.4 கொள்வனவுத் திட்டம்**

அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்களின் 4.2.1(அ) வழிகாட்டலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகளில் மேற்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ள கொள்வனவு நடவடிக்கைகளை உள்ளடக்கிய பிரதான கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், மீளாய்வாண்டில் ரூபா 9,656,415 பெறுமதியான கொள்வனவுகள் மற்றும் மூலதனச் செலவினங்கள் செய்யப்பட்டிருந்தன.

**4.5 வருடாந்த அறிக்கையினை பாராளுமன்றத்தில் முன்வைத்தல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 இன் வருடாந்த அறிக்கை 2013 நவம்பர் 15 ஆந் திகதி வரையில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் வரைபு ஆண்டறிக்கையின் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகப் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு

(ஆ) கணக்கீடு

(இ) செயற்திட்ட நிதிகளின் முகாமைத்துவம்